# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 104/நகராட்சி/2018**

**நாள் : 10/09/2019**

**திருமதி ஹெலன் மேரிஸ் ஸ்டெல்லா,**
**வட்டவிளை,** – **முறையீட்டு மனுதாரர்**
**கோட்டாறு அஞ்சல்**

**மாநகராட்சி ஆணையர்,**
**நாகர் கோவில்.**
– **எதிர் மனுதாரர்**

கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாறு, வட்டவிளை, மாலிக் தினார் சாலை, 34/7/0/3 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி ஹெலன் மேரி ஸ்டெல்லா என்பவரின் 07.05.2018 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 104/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாறு, வட்டவிளை, மாலிக் தினார் சாலை, 34/7/0/3 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி ஹெலன் மேரி ஸ்டெல்லா என்பவர், தனது முறையீட்டு மனுவில் நாகர் கோவில், முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேல் முறையீட்டு வழக்கு எண்கள் 195/2004; 196/2004; 197/2004 மற்றும் 218/2004–இல் வழங்கப்பட்ட 26.11.2008 தீர்ப்பினைத் தொடர்ந்து தான் நகராட்சி ஆணையரிடம் முறையிட்டு புல எண். M6/15-4,8 செண்ட் நிலத்தில் அமைந்திருந்த கிணற்றை மூடி 265 அடி நீளம், 15 அடி அகலம் உள்ள தனிப்பாதையினை பொதுப்பாதையாக மாற்றி அரசு நிதியை தவறாகப் பயன்படுத்தி அலங்காரத் தரை ஓடுகள் பதித்து விட்டனர் எனத் தெரிவித்து தனக்கு உரிமையுள்ள பாதையில் பதிக்கப்பட்டுள்ள தரை ஓடுகளை அகற்றித் தருவதுடன் மூடிய கிணற்றை பழைய நிலையில் வழங்க ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

2. இந்நேர்வு சம்பந்தப்பட்ட முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மேற்படி நகராட்சி ஆணையரின் அறிக்கையில் முறையீட்டு மனுதாரரின் கணவர் திரு அந்தோணி துரை அவர்களுக்கும், அவரது உடன்பிறவா சகோதரர் (Co-brother) அவர்களுக்கும் சொந்தமான இடத்தில் இருவரும் சரிபாதியாகப் பிரித்ததில், இருவரின் சம்மதத்துடன் இருவீட்டுக்கும் நடுவில் பொது வழியாக கார் செல்லும் வழியில் சாலை அமைக்க சம்மதம் தெரிவித்தார்கள் என்றும், அதன்படி திரு துரைராஜ் அவர்கள் பகுதியில் உள்ள கிணற்றை மூடி சாலை அமைக்கப்பட்டுள்ளது என்று ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், அண்ணன் தம்பி, அக்கா தங்கை ஆகியோர்களுக்கிடையே உண்டான காழ்ப்புணர்ச்சி காரணமாக பிரச்சினை எழுந்துள்ளது என்றும், கிணறு உள்ள இடம் மனுதாரரின் இடத்தில் அமையவில்லை என்றும், சாலை அமைத்து பல ஆண்டுகள் ஆகின்றன என்றும், மேலும், இச்சாலை வழிபாட்டு தலத்திற்கு சென்று

3. முறையீட்டு மனுதாரரிடம் 06.05.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனக்கு பாதிப் பங்கு உள்ள 265 அடி நீளம் 15 அடி அகலப்பாதையில் தனது அனுமதியின்றி அலங்கார ஓடுகளை பதித்ததை அகற்றித் தருமாறு கேட்டுக்கொண்டார். மேலும், சாலை அமைக்க நகராட்சிக்கு தானோ அல்லது தனது கணவரோ ஒப்புதல் எதுவும் வழங்கவில்லை என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

4. நாகர்கோவில் நகராட்சி பொறியாளர் அவர்களிடம் 11.07.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 13.03.2019 அன்று முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை செய்ததில், 2008–ஆம் ஆண்டு முதல் இந்தப் பிரச்சினைத் தொடங்கி இன்னும் முடியவில்லை என்று தெரிவித்ததாக விசாரணையின் குறிப்பிட்டார். முறையீட்டு மனுதாரருக்கும் அவரது சகோதரிக்கும் சமமாகப்பிரிக்கப்பட்ட இடத்தின் மையத்தில் சாலை அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அப்பகுதி மக்களிடம் விசாரணை மேற்கொண்டதில் கிணறு முறையீட்டு மனுதாரரின் இடத்தில் இல்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர் என்றும் குறிப்பிட்டார்.

5. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36–இல் தனியார் இடத்தில் இருந்த கிணற்றினை மூடி சாலை அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. இது சம்பந்தமாக நாகர் கோவில் முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 26.11.2008–இல் தீர்ப்புகள் பெறப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட நாளிட்ட தீர்ப்பிற்கு முன்பே 27.08.1989 அன்று கோட்டாறு காவல் நிலையத்தில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கிடையே சில நிபந்தனைகளுக்குட்பட்டும் ஒரு சமரச தீர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சமரசத்தில் கிணற்றில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துறைக் கிணற்றைப் பயன்படுத்துவது மற்றும் கிணற்றை மூடி பாதை அமைப்பது போன்றவற்றை இந்நேர்வின் மனுதாரர் உட்பட 7 நபர்களும் சரிசமமான செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள பிரச்சினை கடந்த 30 ஆண்டுகளாக உள்ளதாக அறியமுடிகிறது. மேலும், இந்நேர்வு சம்பந்தப்பட்ட கிணறு மற்றும் பாதை குறித்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்கள் 195/04,196/04 மற்றும் 218/2004 ல் 26.11.2008 அன்று பகரப்பட்ட முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, நாகர்கோவில் அவர்களின் தீர்ப்பில், இந்நேர்வு சம்பந்தப்பட்ட பாதை தனியார்களுக்கு சொந்தமான பாதை எனவும், பொதுப்பாதை அல்ல என்றும் விளம்புகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட சாலைப்பகுதியினை நகராட்சி தானமாகப் பெற்றாலேயன்றி எந்தவொரு சாலை சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணியினையும் மாநகராட்சி மேற்கொள்ளலாகாது என அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திருமதி ஹெலன் மேரிஸ் ஸ்டெல்லா,
எண்.34/7/0/3, மாலிக் தினார் சாலை,
வட்டவிளை, கோட்டாறு அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 002.

2. நகராட்சி ஆணையர்,
நாகர் கோவில் நகராட்சி,
நாகர் கோவில்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி